**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 12 |
| Name. | : திருமதி. நாகலட்சுமி |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் திருசெங்கோடு ஊரக காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01-02-2021ம் தேதி 21மணிக்கு புளியம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் உதவி ஆய்வாளர் திரு.வசந்தகுமார் என்பவர் பதிவு செய்து வைத்த நி.கு.எண். 71/2021 ச.பி. 302 இதச வாக வழக்கு பதிவுசெய்து எனது பார்வைக்கு வைத்ததை புலன்விசாரணைக்கு நான் எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சுமார் 22 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாக்கியராஜ், ஜெயமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம்

தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9.** சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 01-02-2021 தேதி சம்பவ இடத்தில் வைத்து இவ்வழக்கில் இறந்துபோன மகேந்திரன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.10.** பின்னர் மேற்படி பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக மருத்துவரிடம் ஆஜர்படுத்த த.கா. 428 பழனிச்சாமி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவ அலுவலருக்கு கொடுத்தனுப்பினேன். இவ்வழக்கில் கண்ட எதிரியை தேடி வந்த நிலையில் கிடைத்த தகவலின்பேரில் 02-02-2021ம் தேதி கி.நி.அலுவலர் தங்கமணி அவர்கள் முன்பு மேற்படி எதிரி ஆஜரான தகவல் கிடைத்து காவல்நிலையம் வந்தபோது மேற்படி கி.நி.அலுவலர் தங்கமணி மற்றும் கிராம உதவியாளர் நாகம்மாள் ஆகியோர் இவ்வழக்கில் கண்ட எதிரி அல்லிமுத்து என்பவரை, எதிரியிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்துடன் எதிரியை என்னிடம் ஆஜர்படுத்தினார். மேற்படி எதிரியை காலை 10 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்தும், சாட்சிகள் பாலன், ரவி ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். எதிரியின் கைது பற்றிய தகவலை அவரது உறவினர்களுக்கு முறைப்படி தெரியப்படுத்தியும், மேற்படி எதிரியை சத்தி கனம் நீ.ந அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். 03-03-2021ம் தேதி பணி மாறுதலின்பேரில் உதகமண்டலம் சென்றுவிட்டதால் மேற்படி வழக்கு கோப்பினை எனக்கு பின்னிட்டு வந்த காவல் ஆய்வாளர் வேலுச்சாமி

என்பவரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரேத விசாரணை சமயத்தில் இருந்த சாட்சிகளான சின்னபழனிச்சாமி, செல்வன், பழனிச்சாமி, சுப்பிரமணியம், ரங்கசாமி ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் என்றால் சரிதான். அ.சா.ஆ.10 பிரேத விசாரணை அறிக்கையில் கடைசியாக இறந்துபோன நபரை யார் உயிருடன் பார்த்தார்கள் என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணை சாட்சிகள் யாரும் அன்னேகவுண்டன்புதூரை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். அ.சா.ஆ.9 ஆவணத்தின்படி எதிரியின் வீட்டு வாசல் வடக்கு பார்த்தாற்போல் உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 மற்றும் 9 ஆவணங்களில் விண்ணம்பள்ளி செவிலியர் அறை வாசல் தெற்கு பார்த்து உள்ளதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். விண்ணம்பள்ளி கூட்டுறவு வங்கிக்கும், அங்கன்வாடி மையத்திற்கும் இடையே ஒரு சிஎஜி மிஷன் சர்ச் தெற்கு பார்த்து உள்ளது என்றும், அதை வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் அவ்வாறு இல்லை. நான் சொல்வது தவறு என்றும், சிஎஜி மிஷன் சர்ச் உள்ளது என்றும், நான் அதை குறிப்பிடாமல் அ.சா.ஆ.9 ஆவணத்தில் விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அங்கன்வாடி மையத்தினை ஒட்டி டீ கடையும், டெய்லர் கடையும் உள்ளது அதை அ.சா.ஆ.9 ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ராமசாமி வணிக வளாகத்தில் இ-சேவை மையமும், எஸ்பிஐ சேவை மையமும் உள்ளது என்றால் கடைகள் என்று குறிப்பிட்டுள்ளேன். ராமசாமி வணிக வளாகத்திலிருந்து 100 அடி கிழக்கே கி.நி.அலுவலரின் அலுவலகம் உள்ளது என்றால் நினைவில்லை. எதிரியின்

வீட்டிற்கு நேர் தென்புறம் உள்ள ரோட்டை ஒட்டி தான் கி.நி.அலுவலரின் அலுவலகம் உள்ளது என்றால் நினைவில்லை. நான் சம்பவ இடம் சென்று சரியாக விசாரிக்கவில்லை என்பதால் தான் கி.நி.அலுவலர் அலுவலகம், இ-சேவை மையம்,எஸ்பிஐ சேவை மையம், சிஎஜி மிஷன் சர்ச் ஆகியவை பற்றி குறிப்பிடாமல் விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது விசாரணையில் சம்பவ சமயத்தில் சமுதாய கூடத்தில் யாராவது தங்கியிருந்தார்களா என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மேற்படி சமுதாய கூடத்தில் சம்பவ சமயத்தில் தங்கம்மாள், சந்தியா, ஜெயமுருகன் மற்றும் சிலர் தங்கியிருந்தார்கள் என்றும், அவர்களை விசாரித்திருந்தால் உண்மை சம்பவம் தெரியவந்திருக்கும், வேண்டுமென்றே அவர்களை விசாரிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்னநேரத்தில், சொன்ன நாளில் சொன்னதுபோல் கி.நி.அலுவலரும், அவரது உதவியாளரும் எதிரியை என் முன்பாக ஆஜர்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் முன்பாக எதிரி எந்தவிதமான வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சி பட்டியலில் உள்ள 1 முதல் 15 வரையிலான சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், அவர்கள் என் முன்பாக வாக்குமூலங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**